எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. என்றாலும், திடீரென்று அவற்றின் செலவினங்கள் அதிகமாகிவிட்ட காரணத்தாலே ரூ. 6 இலட்சத்திற்கு மேல் செலவாகும். அதனால், வேறு எந்தத் திட்டத்தையும் எடுத்துக் கொள்ள முடியவில்லை. 'அதர் ரோட்ஸ்' என்கின்ற தலைப்பின் கீழேதான் எடுத்துக்கொள்ள முடிகிறது. அதற்கான பண ஒதுக்கீடு இல்லாத காரணத்தாலே, அதை மீண்டும் எடுப்பதற்கான முயற்சியைச் செய்யலாம்.

THIRU B. VENKATASWAMI : It is an important road. The people are suffering a lot. When allotment is made under the Fifth Plan, first priority may be given to this road and work taken up?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: பணம் அதிகமாகக் கிடைத்தவுடனே அதற்கான அனுமதியைக் கொடுக்க முடியும்.

உய்யக்கொண்டான் கால்வாயின் குறுக்கே பாலம்.

* 244 வினா—**திரு. கு. காமாட்சி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவெறும்பூர் தொகுதி மணிகண்டம் ஒன்றியம், நாச்சிகுறிச்சி ஊராட்சியைச் சேர்ந்த இனியனூருக்கு அருகில் உய்யக்கொண்டான் கால்வாயின் குறுக்கே பாலம் ஒன்று கட்டும் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இல்லை.

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, இதுவும் திரு. கோதண்டராமையா சொன்னதைப் போலத்தான். ஒரு பக்கத்திலே பெரிய கிராமம் இருக்கிறது. இன்னொரு பக்கத்திலே இன்னொரு கிராமம் இருக்கிறது. இவை இரண்டுக்கும் மத்தியிலே உய்யக்கொண்டான் கால்வாயிருக்கிறது. ஆகவே, மக்கள் சுற்றிக் கொண்டுதான் போகவேண்டும், ஐந்தாண்டுத் திட்டத்திலாவது, இத்திட்டம் பரிசீலனை செய்யப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: கனம் உறுப்பினர் அவர்கள் சொல்கிற கஷ்டம் எல்லாம் நேரிடையாகவே எனக்குத் தெரியும். இருந்தாலும், நிதிநிலை சரியாக இல்லாத காரணத்தாலே, இந்த ஆண்டு அதைச் செய்வதற்கில்லை.